IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

SC.NO.167/2023

Deposition of Witness for P.W.8

| | | |
|---|---|---|
| NAME | - | மருத்துவர் திருமதி. கலைச்செல்வி |
| FATHER NAME | - | |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| OCCUPATION | - | சட்டம் சார்ந்த மருத்துவத் துறையில் மூத்த உதவி பேராசிரியராக மற்றும் தலைமை பொறுப்பில் வேலூர் |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.11.2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>-

நான் தற்போது சட்டம் சார்ந்த மருத்துவத் துறையில் மூத்த உதவி பேராசிரியராக மற்றும் தலைமை பொறுப்பில் வேலூரில் அரசு மருத்துவக் கல்லூரியில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.04.2019 பணியில் இருந்தபோது சத்துவாச்சாரி காவல் நிலைய குற்ற எண்.191/2019 சம்மந்தமான ஆண் பிரேதம் வயது 35 பிரேதத்தினை காவலர் 2605 வேங்கடேசன் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டு அதே நாள் பிற்பகல் 01.45 மணியளவில் பிரேத கூறாய்வு செய்தேன். புற ஆய்வு ஆண் பிரேதம் மிதமான கட்டமைப்புடனும் ஊட்டச்சத்துடனும் காணப்பட்டது. மரண விரைப்பு உடல் முழுவதும் காணப்பட்டது. உலர்ந்த ரத்த கறைகள் முகம் ,மார்பு பகுதி, கைகள் மற்றும் கால் பகுதிகளில் ஆங்காங்கே காணப்பட்டன. நக கணுக்கள் வெளிறி காணப்பட்டன. உடலின் மேல் காணப்பட்ட இறப்பிற்கு முன் ஏற்பட்ட வெளிப்புற காயங்கள் பின் வருமாறு.

1. செம்பழுப்பு நிற சிராய்ப்புகள் அ .4.2 X 3.1 செ.மீ. தாடையின் வலது புறத்திலும் ஆ.6.1X2.8 செ,மீ இடது தோள்பட்டையிலும் இ.3.5X1.8 செ.மீ. முதுகின் பின் புறத்திலும் காணப்பட்டன.

2.வெட்டுக் காயங்கள் அ)நீள்வாக்கில் அமைந்த எலும்பு வரை ஆழத்திலுள்ள சுமார் 11.2X1.2 செ.மீ. அளவில் தலையின் மேல் பகுதியில் இடது பிறத்திலும் ஆ)குறுக்காக அமைந்த எலும்பு வரை ஆழத்திலுள்ள சுமார் 13.5X3.8 செ.மீ அளவில் முகத்தில் இடது புறத்தில் காணப்பட்டது. இக்காயமானது இடது புற கண்கள் மூக்கு மற்றும் இடது கண்ணம் இடது காது வரை நீண்டிருந்தது. இ)குறுக்காக அமைந்த எலும்புவரை ஆழத்திலுள்ள சுமார் 12.2X3.1 செ.மீ. கீழ் தாடையில் இடது புறத்தில் காணப்பட்டது. மேலும் தாடையில் வெட்டு முறிவினை ஏற்படுத்தியிருந்தது. ஈ)சாய்வாக அமைந்த எலும்பு வரை ஆழத்திலுள்ள சுமார் 11.5X4.3 செ.மீ. அளவில் வலது கையில் முன்புறத்தில் காணப்பட்டது. உ)சாய்வாக அமைந்த தசை வரை ஆழத்திலுள்ள சுமார் 7.5X1.8 செ.மீ. இடது கை முட்டியின் பின் புறத்தில் காணப்பட்டது. காயத்தின் விளிம்புகள் கன்றி காணப்பட்டன.

3. சிதைந்த மற்றும் முறிந்த காயமானது இடது முழங்கையில் காணப்பட்டது. மேலும் காயத்தின் விளிம்புகள் சீரற்று கிழிந்தும் கன்றியும் காணப்பட்டது. மேலும் காயத்தின் கீழாக அமைந்த தசைகள் மற்றம் எலும்புகள் முறிந்து காணப்பட்டன.

**அக ஆய்வு**

தலைப்பகுதியில் கூறாய்வு செய்ததில் கபாலத்தில் இடது புறத்தில் வெட்டு முறிவு காணப்பட்டது. மேலும் கூறாய்வு செய்கையில் மூளை இயல்பாகவும் பிளந்து பார்த்ததில் வெளிறியும் காணப்பட்டது. முதுகு தண்டுவடம் இயல்பாக இருந்தது. கழுத்து பகுதியில் கூறாய்வு செய்ததில் தசைகள் மற்றும் நாவடி எலும்பு இயல்பாக இருந்தன. மார்பு பகுதியை கூறாய்வு செய்ததில் நெஞ்சாங்கூடு மற்றும் விலா எலும்புகள் இயல்பாக இருந்தன. நுரையீரல்கள் இயல்பாகவும் பிளந்து பார்கையில் வெளிறியும் காணப்பட்டன. இருதயம் இயல்பாகவும் இருதய தமனிகள் இயல்பாகவும் இருந்தன. வயிற்றுப் பகுதியை கூறாய்வு செய்ததில் இரைப்பையில் சுமார் 100 மி.லி. அளவிலான சுமார் பகுதி செறித்த உணவு பொருட்கள் காணப்பட்டன. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் இயல்பாகவும் பிளந்து பார்கையில் வெளிரியும் காணப்பட்டன. பிறப்புறுப்புகள் இயல்பாக இருந்தன. உள்ளுறுப்புகள் ரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு மது உள்ளது என அறிக்கை பெறப்பட்டன மதுவின் அளவும் குறிப்பிடப்பட்டிருந்தது. ரத்த மாதிரி இரத்த வகை மற்றும் பிரிவுக்காக அனுப்பப்பட்டது. இறுதி அறிக்கையில் மேற்கண்ட நபர் காயங்களின் விளைவினால் ஏற்பட்ட ரத்த

போக்கின் காரணமாக இறந்திருக்கக் கூடும் என்றும் மேலும் இறக்கும் தறுவாயில் அதிகலவிலான மது அருந்தி இருந்தார் என்றும் இறுதி கருத்துறை வழங்கினேன். நான் வழங்கிய சடலக் கூறாய்வு சான்று அ.த.சா.ஆ.4 ஆகும். இறுதி கருத்துரை அ.த.சா.ஆ.5 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் இரண்டு அருவாள்களால் புற ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ள காயம் எண்.2 ஏற்பட்டிருக்கக் கூடும். என்னிடம் காண்பிக்கப்படும் இரண்டு இரும்பு பைப் காயம் எண்.1 மற்றும் 3 ஏற்பட்டிருக்கக் கூடும். ஆய்வாளர் என்னைவிசாரணைசெய்தார்.

## <u>குறுக்கு விசாரணை</u>-

காயங்களின் வயது குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயங்களின் தன்மை குறித்து நான் சொல்லியுள்ளேன். ஆய்வாளர் எந்த தேதியில் என்னை விசாரித்தார் என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது ஆயுதங்களை காண்பித்து ஆயுதங்களால் மேற் சொன்ன காயங்கள் ஏற்படுமா என்று என்னை விசாரிக்கவில்லை. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்பட்ட ஆயுதங்களால் மேற் சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆயுதங்களில் இரத்தக் கறை உள்ளதா என்பது பற்றி இரத்த வகைக்காக ஆய்வாளரிடம் அறிவுறித்தினேனா என்றால் அது தடய அறிவியல் துறை சம்மந்தப்பட்டது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 17.11.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2025.11.17 10:08:25 +0530

Additional District Judge(FTC),
Vellore